பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 15 புதன்கிழமை 01.10.2025 கதிர் 325




இன்று உலக சிறுவர் முதியோர் தினம். சிறுவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இந்தத் தினம் ஒரு விதத்தில் உதவுகின்றது. தொடக்க நிலைப் பாடசாலைகளில் ☞2

## மூன்றாவது தடவையாகத் திறக்கப்பட்ட யாழ். பொருளாதார மத்திய நிலையம்

யாழ்ப்பாணம்விசேடபொருளாதாரமத்திய நிலையம் நேற்று மூன்றாவது தடவையாக நேற்றுத்திறந்துவைக்கப்பட்டது. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க பொருளாதார மத்திய நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

திறந்து வைக்கப்பட்ட நிலையத்தில் மொத்த விற்பனையையும் விருந்தினர்கள் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ஸ்ரீபவானந்தராசா, றஜீவன், சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர், யாழ். மாவட்டச் செயலர், வடக்குமாகாணவிவசாயஅமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர்கள், ☞6

## சிறுவர், முதியோர் உரிமைகளைப் பேண ஆளும்தரப்பு முழுமையான அர்ப்பணிப்பு

### அரசுத் தலைவர் வாழ்த்துச் செய்தி

இன்று உலக சிறுவர்கள் தினம் மற்றும் உலக முதியோர் தினமாகும். ஒரு நாட்டின் மக்கள் தொகையில் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள்கணிசமானவிகிதத்தில்உள்ளனர். இந்தஇரண்டுதலைமுறையினரின்உரிமைகள் மற்றும் நலனுக்காக எங்கள் ஆளும்தரப்பும் முழுமையாக உறுதிபூண்டுள்ளது. சிறுவர்கள் மற்றும் முதியவர்களின் நல்வாழ்வுக்காக நாங்கள்தொடர்ந்துசெயலாற்றிவருகிறோம்என அரசுத்தலைவர்அநுரகுமாரதெரிவித்துள்ளார்.

உலக சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு அரசுத் தலைவர் வெளியிட்டுள்ளவாழ்த்துச்செய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ☞2

# வடமாகாண கல்விப் புலத்தில் அரசியல் தலையீடு அதிகரிப்பு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**வடமாகாண கல்விப் புலத்தில் என்றுமில்லாதவாறு அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. பதவி நியமனங்களின்போது தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களாகச்செயற்படுபவர்களுக்காகபரிந்துரைக்கும் செயற்பாடுகளில்ஆளும்தரப்புநாடாளுமன்றஉறுப்பினர்கள் செயற்படுகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

**சங்கத்தின் செயலாளர் ஜேசப்ஸ்ராலின் இது தொடர்பில் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரின் தலையீடுகள் எல்லை மீறிச் செல்கின்றன. பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் செல்லக்கூடாது என்ற தேசிய மக்கள் சக்தியின் பிரதமரின் கூற்று வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டது.**

**தம்மை ஆளும்தரப்பு ஆதரவாளர்களாகக் காட்டி, ஆளும்தரப்பு தரப்பு அரசியல்வாதிகளைப்** ☞2

### வடக்கு கிழக்கில் உள்ள

## 100 பாடசாலைகளின் சீரமைப்புக்கு திட்டத்தை முன்வைத்த 'நிப்போன்'

இலங்கையில் உள்ள அனைத்துச் சமூகங்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்த நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் யொஹெய் சசகாவா வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 100 பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலுக்கான எதிர்காலத் திட்டங்களையும் அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் முன்வைத்தார்.

ஜப்பானியஅரசாங்கத்தின்அழைப்பின்பேரில் ஜப்பானுக்குஅரசுமுறைப்பயணமாகச்சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்றுக் காலை டோக்கியோவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் நிப்பொன் மன்றத்தின் நிறுவனத் தலைவர் யொஹெய் சசகாவாவைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு யொஹெய் சசகாவா தனது தொடர்ச்சியான ☞2

## ஓரினச் சேர்க்கை ஊக்குவிப்பு சட்டத்தை எதிர்த்து பௌத்த பீடங்கள் போர்க்கொடி

### அரசுத் தலைவருக்கு அவசரக் கடிதம்

சமூகச் சீரழிவை ஏற்படுத்தும் குறுகிய பார்வை கொண்ட சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும், ஒழுக்கக்கேடான ஓரினச்சேர்க்கை நடத்தையை ஊக்குவிக்கும் அரச இயந்திரத்தின் முயற்சிகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து மூன்று பீடங்களை சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்குக கடிதம் எழுதியுள்ளனர்.

ஒரு நாட்டின் பண்பாட்டு அடையாளம், வரலாற்று பாரம்பரியம் மற்றும் ஒழுக்கங்கள் புறக்கணிக்கப்பட்டு, குறுகிய தன்னிச்சையான மற்றும் குருட்டுத்தனமான போலித்தனத்தின் அடிப்படையில் ஆளும்தரப்பை நிர்வகிக்க முயற்சித்தால்,அது நாட்டில் அராஜகத்திற்கும் முழு சமூகத்தின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று தேரர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதைய ஆளும்தரப்பால் உடல் ரீதியான தண்டனையை குற்றமாக்குவதற்கு முன்மொழியப்பட்ட தண்டனைச் சட்டத்தின் 82ஆவது பிரிவில் திருத்தம் செய்வதும், ஓரினச்சேர்க்கையைஅடிப்படையாகக்கொண்ட சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழு ஆதரவளிப்பதும் இத்தகைய கடுமையான ஒழுக்க அராஜகத்திற்கும் பல சமூக நெருக்கடிகளுக்கும் காரணங்களாகும் என்று தேரர்கள் தங்கள் கடிதத்தில் அரசுத் தலைவருக்குத் தெரிவித்துள்ளனர்.

பௌத்த தத்துவ விழுமியங்களின் தனித்துவம் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடு நிலையான சமூக வளர்ச்சிக்கு எவ்வாறு வழிவகுக்கிறது என்பது குறித்து எப்போதும் தனது கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் அரசுத் தலைவர், இந்த விடயத்தில் அவசர கவனம் செலுத்தி இந்த ஒழுக்கக்கேடான செயல்களைத் ☞2

## தாஜுதீன் படுகொலை வழக்கில் சந்தேகநபர் ஒருவர் அடையாளம்

ரக்பி வீரர் வசீம் தாஜுதீனை படுகொலை செய்ய வந்த குழுவில், சமீபத்தில் மித்தெனிய பகுதியில் படுகொலை செய்யப்பட்ட அருண விதானகமகே எனப்படும் 'கஜ்ஜா'வும் இருந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மினுர செனரத் தெரிவித்தார்.

படுகொலைசெய்யப்பட்டகச்சாவின்மனைவி சி.சி.டி.வி. காணொளிகளை அடிப்படையாகக் கொண்டு அந்தக் குழுவில் இருப்பது தனது கணவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன எனவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றசெய்தியாளர்கள்சந்திப்பில்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2012.05.17 அன்று அதிகாலை பிரபல ரக்பி வீரர்வசீம்தாஜுதீன்என்பவர்நாரஹேன்பிட்டிய பார்க் வீதி சாலிக விளையாட்டு மைதானத்துக்கு அருகில் விபத்துக்குள்ளானார். அவரது இறப்பு சந்தேகத்துக்கிடமானது என்பது முதலாவதாக அறிக்கையிடப்பட்டது.

இதற்கமைய நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையம் மற்றும் பொரளை குற்றத்தடுப்பு பிரிவால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தஇறப்புவிபத்தால்ஏற்பட்டதுஎன்றுகுறிப்பிட்டு அந்த விசாரணைகளை நிறைவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் பின்னர் 2015ஆம் ஆண்டு ☞2

## எரிபொருள் விலைகளில் நள்ளிரவு முதல் மாற்றம்

மாதாந்தஎரிபொருள்விலைச்சூத்திரத்துக்கு அமைய நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில்சிலஎரிபொருட்களின்விலைகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியகூட்டுத்தாபனம்அறிவித்துள்ளது.

அதன்படி, லங்கா டீசல் ஒரு லீற்றரின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 277 ரூபாய் ஆகும். ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 335 ரூபாவாகும்.

மேலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 05 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 180 ரூபாவாகும்.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் மற்றும் லங்கா சூப்பர் டீசலின் விலைகளில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கை பெற்றோலிய ☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இந்தத் தினம் சிறுவர்களுக்குக் குதூகலம் நிறைந்ததாக மாறியுள்ளது. இன்றைய நாளில் அவர்கள வண்ணச் சட்டைகள் அணிந்து பாடசாலைக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் பாடசலைக் காலத்தில் இந்த ஒரு நாளே கொண்டாட்டத்திற்குரியது சிறந்தது என்று அவர்கள் நினைக்கிறார்கள். பாடசாலைகளின் வழக்கமான நடவடிக்கைகள் சித்திரவதைக் கூடங்கள் என்கிற மனநிலையை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் இத்தகைய போக்குகள் தேவையான என்கிற முரண் நிலை ஒருபக்கம் இருக்க, சிறுவர்களுக்கு ஒரு நாளாவது பாடசாலைகளில் மகிழ்ச்சியாக இருக்கக் கிடைக்கிறதே என்பதை நினைத்து மகிழ்ச்சி கொள்ள வேண்டியதுதான்.

அதேநேரத்தில் சிறுவர்களுக்கான இன்றைய தினத்தில் கவனிக்கப்பட வேண்டியவர்களான சிறுவர்களும் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து கடந்த 9 மாதங்களில் பல்வேறு குற்றங்களுக்காகச் சிறையில் அடைக்கப்பட்ட பெண்களுடன் 47 குழந்தைகள் சிறையில் இருக்கின்றனர் என்று சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது. அந்தக் குழந்தைகளில், 20 சிறுவர்களும் 27 சிறுமிகளும் அடங்குவர். அவர்கள் எந்தக் குற்றங்களும் செய்யாதவர்கள். குற்றவாளிகள் அல்லர்.

ஜனவரி 1 முதல் செப்டெம்பர் 27 வரையிலான 9 மாதங்களில், 1,483 பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பெண்களில், 229 பேர் தண்டனை பெற்ற கைதிகள். ஏனையோர் சந்தேகநபர்களான விளக்கமறியல் கைதிகள். இவர்களில் பெரும்பாலானோர் போதைப் பொருளுடன் தொடர்புபட்ட குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றோர் அல்லது கைது செய்யப்பட்டோர்.

ஜனவரி 1 முதல் ஜூலை 31 வரையிலான 7 மாதங்களில், போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 184. அவர்களில், 75 பேர் ஐஸ் குற்றத்திற்காகவும், 97 பேர் ஹெராயினுக்காகவும், 8 பேர் கஞ்சா குற்றத்திற்காகவும், ஒரு பெண் ஓபியம் குற்றத்திற்காகவும், 3 பேர் பிற போதைப்பொருட்களுக்காகவும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பல்வேறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 885, அவர்களில் 369 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதில் 138 பேர் ஐஸ் குற்றங்களுக்காகவும், 199 பேர் ஹெராயினுக்காகவும், 17 பேர் கஞ்சா குற்றங்களுக்காகவும், 14 பேர் பிற போதைப்பொருள் குற்றங்களுக்காகவும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு, 655 திருமணமான பெண்கள் பல்வேறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டனர், அதில் 278 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காகவும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இப்படிச் சிறைகளில் அடைக்கப்படும் பெண்களுக்கு மிகச் சிறிய குழந்தைகள் இருந்தால், அவர்களை சிறைக்கு வெளியே வைத்துப் பராமரிக்கும் வசதி பெற்றோருக்கு இல்லை என்றால் அவர்களும் சிறைகளிலேயே தாயுடன் இருப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

உலக சிறுவர் தினமான இன்றைய நாளில் அப்படிச் சிறைகளில் எதற்கெனத் தெரியாது வாடும் சிறுவர்கள் பற்றியும் நினைவில் கொள்வோம்.

............................

சட்டத்தரணிகள் தங்களின் வாகனங்களைத் தனியாக அடையாளப்படுத்தும் வகையிலான 'பாஸ்'கள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுவதாக அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. பொதுவாக சட்டத்தரணிகள் இந்தப் 'பாஸ்' இனை தமது வாகன முன் கண்ணாடியில் ஒட்டிக்கொள்வார்கள். இதன் மூலம் போக்குவரத்திலும், பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளின் போதும் விலக்குகளை எதிர்பார்ப்பார்கள்.

இந்த வர்த்தமானி அறிவிப்பு சர்ச்சைக்குரியதாக மாறியிருக்கிறது. இந்த அறிவிப்பு சட்டத்தரணிகளுக்குப் பொருத்தமற்றது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு ஒரு கடிதத்தையும் அது எழுதியுள்ளது.

வர்த்தமானி அறிவிப்பின் அடிப்படையில் வழக்கறிஞர்களுக்கான இந்த அடையாள அனுமதிகளை நீக்குவதற்கான எந்தவொரு முயற்சியும் சட்டவிரோதமானது என்று சங்கம் சுட்டிக்காட்டுகிறது. இந்த வர்த்தமானி அறிவித்தல் உத்தரவின் பொருள் சட்டத்தரணிகளுக்குப் பொருந்தாது என்பதே சங்கத்தின் வாதம்

1. இந்த வாகன அடையாள அனுமதிகள் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் மற்றும் நீதி நிர்வாகத்துடன் தொடர்புடைய பிற நிறுவனங்களுக்குள் நுழையும்போது வழக்கறிஞர்களை அங்கீகரிக்க உதவுகின்றன.

2. அத்தகைய வளாகங்களுக்கு வாகன அணுகலை ஒழுங்குபடுத்துவதில், முக்கியமான பாதுகாப்பு நடவடிக்கையில் அவை முக்கியமாகச் செயல்படுகின்றன.

3. சட்ட அமுலாக்க அதிகாரிகள் இந்த பாஸ்களை வாகனம் ஒரு வழக்கறிஞரால் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கான சான்றாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

4. 1997 முதல் 28 ஆண்டுகளாக யபுறீஸி இந்த வருடாந்திர அடையாள அட்டைகளை வழங்குவதை பராமரித்து வருகிறது.

5. 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து, பாதுகாப்பு நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில், உறுப்பினர்களின் வாகனங்களுக்கு கூடுதல் அடையாள ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆகிய காரணங்களை முன்வைத்து தமது அனுமதி 'பாஸ்'களை நீக்கக் கூடாது என்று சங்கம் வாதிடுகின்றது.

'தற்போதைய சூழ்நிலையில் இதுபோன்ற செய்திகள் வெளிவந்திருப்பது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. வழக்கறிஞர்களின் வாகன அடையாள அட்டைகளின் அவசியத்தை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் தற்போதைய முறையை மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று நாங்கள் நம்புகிறோம்' என்று பொலிஸ் மா அதிபருக்கு தான் அனுப்பிய கடிதத்தில் சங்கம் தெரிவித்துள்ளது.

இதை மீறி வர்த்தமானி அறிவித்தலை பொலிஸார் நடைமுறைப்படுத்துவார்களா என்பதே இப்போதுள்ள கேள்வி. சட்டம் அனைவருக்கும் சமம் என்று மேடைக்கு 300 தடவைகள் கூவும் என்.பி.பி. ஆளும்தரப்பு இப்போது என்ன செய்யப்போகிறது? சட்டத்தை எல்லோருக்கும் சம்மமாக நடைமுறைப் படுத்துமா? அல்லது நடைமுறைப்படுத்தத்தான் முடியுமா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடமாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளுக்கு அழைத்து குறுக்கு வழிகளில் நலன்களை அனுபவிக்கும் கீழ் நிலைக்கு சில பாடசாலை அதிபர்கள் செல்லும் நிலைக்கு, வடமாகாணத்தின் கல்வியில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது.

கடந்தகாலங்களில் அமுக்கக்குழு போன்று நாடகமாடி, ஆசிரியர்களின் உரிமை பற்றிப் பேசியிருந்த ஜே.வி. பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கம், இன்று ஆளும்தரப்பு அமைச்சர்களாலும் பிரதி அமைச்சர்களாலும் ஆள்கொள்ளப்பட்டு, ஏனைய தொழிற்சங்களை நசுக்கும் செயற்பாட்டிலும், கல்விப் புலத்தை அச்சுறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது.

பிரதி அமைச்சர்களாகவும் இருந்துகொண்டு, ஜே.வி.பி. சார்பு ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்களாகவும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி, வடமாகாண ஆளுநருடன் அமைச்சர்களாக அமர்ந்துகொண்டு, தமது தொழிற்சங்கத்துடனான சந்திப்பு என்ற போர் வையில் வடமாகாண அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். இதுபோன்ற அரசியல் தலையீடுகள் முன்பிருந்த எந்த ஆட்சியிலும் நடைபெற்றதில்லை. வடமாகாணத்தில் நடைபெறும் இடமாற்றங்களில் இடமாற்றச்சபை, மேன்முறையீட்டு சபையின் தீர்மானங்களை மீறி, ஆளும்தரப்பு சார்பு தொழிற் சங்கமாகக் காட்டி அதிகாரிகளை அச்சுறுத்தி ஒருதலைப்பட்சமான முடிவுகளைத் திணிக்க முயல்கிறார்கள். இடமாற்றச்சபைகளின் தீர்மானங்களையே ஒருதலைப்பட்சமாக மாற்றியமைக்கச் செயற்படும் அதேவேளை, தமது ஆதரவாளர்களுக்கு இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் அங்கீகாரமின்றி, வடமாகாண ஆளுநரைக் கொண்டு இடமாற்றங்களை நிறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள். வடமாகாண ஆளுநர் தன்னிச்சையாக இடமாற்றங்களை நிறுத்தும் அளவுக்கு அரசியல் தலையீடுகள் எல்லை மீறியுள்ளன. அத்துடன் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகி றார்கள்.

தமது பதவி நிலையை மீண்டும் குறுக்கு வழியில் பெற்றுக்கொள்வதற்காக வடமாகாணத்தின் கல்வித் திணைக்களத் திலுள்ள மேலதிகாரி ஒருவரும், தனது எதிர்கால வரப் பிரசாதங்களைப் பெறுவதற்காக, ஜே.வி. பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இடமாற்றங்கள் அரசியல் நிகழ்ச் சிநிரலில் நடக்கும் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் முற்றாக எதிர்க்கின்றது. இத்தகைய அரசியல் தலையீடுகளை எதிர்க்கும் முகமாக 2025.09.24 வடமாகாணத்தில் சேவையின் தேவை கருதிய இடமாற்றம் தொடர்பான, இடமாற்ற சபையை இலங்கை ஆசிரியர் சங்கம் புறக்கணித்து வெளியேறியுள்ளது.

குறித்த சில முறைகேடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். இடமாற்றங்களில் அரசியல் தலையீடுகள் முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும். இதுபோன்ற செயற்பாடுகள் தொடருமாயின் இலங்கை ஆசிரியர் சங்கம் பரந்துபட்ட தொழிற்சங்க செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் - என்று அறிக்கையில் உள்ளது.

## ஓரினச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று மகாநாயக்க தேரர்கள் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்.

## தாஜுதீன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி மதுரட அப்போதைய பொலிஸ்மா அதிபர் இலங்ககோனுக்கு இந்த விசாரணைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இந்த அறிக்கையின் பிரகாரம் அப்போதைய பொலிஸ்மா அதிபர் இலங்ககோன் தாஜுதீன் படுகொலை தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைத்தார்.

இந்த விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. தாஜுதீன் இறப்புத் தொடர்பில் முதலாவது உடற்கூறாய்வு முறையாக இடம்பெறவில்லை, சந்தேகம் காணப்படுவதாக விசாரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கல்சிசை நீதிமன்றத்துக்கு விடயங்களை அறிக்கையிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உடல் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி விசேட வைத்தியர் அஜித் தென்னக்கோன் தலைமையிலான மூவரங்கிய குழுவின ரால் இரண்டாவது உடற்கூறாய்வு மேற் கொள்ளப்பட்டது.

இதன்போது தாஜுதீனின் கழுத்து மற்றும் மார்பு பகுதியில் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு, இந்த இறப்பு விபத்தால் இடம்பெற்றதல்ல, மனிதக் கொலை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இந்த இறப்பு மனித படுகொலை என்ற அடிப்படையில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டனர்.

தாஜுதீனின் கார் பயணித்த வீதி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவு விசேட கவனம் செலுத்தி விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இந்த கார் பயணித்த வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி காணொளி பதிவுகள் முழுமையாக ஆராயப்பட்டுள்ளன.

சி.சி.டி.வி காணொளிகளை பரிசீலனை செய்கையில் தாஜுதீன் ஒரு கடைக்கு முன்னாள் காரை நிறுத்திவிட்டு அந்த கடைக்குள் சென்று தண்ணீர் போத்தல் ஒன்றை வாங்கிவிட்டு மீண்டும் காரில் ஏறி செல்கிறார். அவரது காரை பின்தொடர்ந்து மற்றொரு கார் செல்கிறது. அந்தக் காரில் இடைநடுவில் ஒருவர் ஏறுகிறார். அந்த நபர் யாரென்று அறிவதற்கு அந்த புகைப்படம் ஊடகங்களுக்கு அக்காலப் பகுதியில் வெளியிடப்பட்டது. இருப்பினும் அந்த நபரை அடையாளம் காண முடியவில்லை.

இந்தநபர் தொடர்பில் தற்போது பல விடயங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியாவில் இருந்து அண்மையில் இலங்கையின் பாதாள குழுவின் பிரதான உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்கள். இவர்களில் பெகோ சமன் என்பவர் உள்ளார்.

இந்த பெகோ சமன், அருண சாந்த என்ற பெயருடைய கச்சா என்பரின் கொலையுடன் தொடர்புப்பட்டுள்ளார். இந்தக் கச்சா என்பவரின் மனைவி சுய அடிப்படையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலமளித்துள்ளார். கச்சா என்பவருக்கு பல தரப்பில் இருந்து உயிரச்சுறுத்தல் இருந்தன என்று அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட கச்சா 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் யூடியூப் நேர்காணல் ஒன்றில் பங்குப்பற்றி தாஜுதீன் படுகொலை பற்றி ஒருசில விடயங்களை குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கச்சாவின் மனைவியிடம் வினவியபோது கச்சா அந்த நேர்காணலில் குறிப்பிட்ட விடயங்களையே தான் அறிந்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தாஜுதீனின் காரைப் பின்தொடர்ந்து சென்ற காரின் காணொளியை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கச்சாவின் மனைவிடம் காண்பித்துள்ளார்கள். அந்தக் காரில் இருந்தது தனது கணவர் என்று கச்சாவின் மனைவி அடையாளப்படுத்தியுள்ளார். அந்த நபரின் உடல் இலட்சணங்களை அடிப்படையாகக் கொண்டு, அது தனது கணவர்தான் என்பதை கச்சாவின் மனைவி உறுதிப்படுத்துகிறார்.

படுகொலை செய்யப்பட்ட தாஜுதீன் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் 13 ஆண்டுகளாக காலமாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

## சிறுவர்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலம் சிறுவர்களின் கைகளிலே உள்ளது. அவர்களின் உலகம் உண்மையானமற்றும் அழுக்கற்ற உலகம் என்பதால் அது மிகவும் அழகானது. அந்த அழகை அனுபவிக்க அவர்களுக்கு தடையற்ற வாய்ப்பை வழங்குவது ஒரு சமூகத்தின் பொறுப்பாகும். உரிமைகளுடன் கடமைகளும் பொறுப்புகளும் வருகின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் ஒரு ஆளும்தரப்பாக, சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் நாங்கள் எப்போதும் உறுதிபூண்டுள்ளோம். சிறுவர் என்பது யார் என்பதை மிகவும் நடைமுறை மற்றும் விரிவான முறையில் வரையறுப்பதன் மூலம் சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான தலையீடுகளை நாங்கள் செய்து வருகிறோம்.

அதில் சகல பிள்ளைகளினதும் உடல் உள நலன் மற்றும் அபிவிருத்திக்காக கல்விக்கான சமமான பிரவேசம், வழிகாட்டுதல், சமூகப் பாதுகாப்பு, சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், பாகுபாடு மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்துவகையான வன்முறைகளிலிருந்தும் பாதுகாப்பு, அத்துடன் அனைத்து பிள்ளைகளின் உடல் மற்றும் மன நல்வாழ்வு மற்றும் மேம்பாட்டிற்காக சரியான ஊட்டச்சத்தை வழங்குதல் மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு எங்கள் ஆளும்தரப்பும் உறுதிபூண்டுள்ளது.

பாடசாலை செல்லும் வயதுடைய எந்த ஒரு பிள்ளையும் இனம், பொருளாதார நிலை அல்லது வேறு எந்த காரணிகளாலும் கல்வியை இழக்கக்கூடாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எனவே, இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், ஓட்டிசம் உள்ளிட்ட வளர்ச்சி குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய சேவை வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

அத்தகைய சமயத்தில், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு இந்த ஆண்டு உலக சிறுவர்கள் தின கொண்டாட்டத்தை ' உலகை வழிநடத்த - அன்பால் போஷியுங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்வதன் மூலம் அந்த இலக்குகளை நோக்கி செல்ல மேலும் வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த விசேட தினத்தில், நம் பிள்ளைகளுக்கு அன்பு, ஆதரவு மற்றும் பாதுகாப்பை வழங்குவதாக நாம் மீண்டும் உறுதிமொழியளிக்கிறோம். அவர்களின் மகிழ்ச்சியான புன்னகை நமது தேசத்தின் நம்பிக்கையும் பலமும் ஆகும். மேலும், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு நமது முதியவர்கள் அளித்த பங்களிப்பிற்காக அவர்களுக்கு நமது மரியாதையையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். சிறுவர்களும் முதியவர்களும் பாதுகாப்பும் மரியாதையும் நிறைந்த இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் கைகோர்ப்போம்!

# லஞ்சக் குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் அதிகாரிக்குப் பிணை

பொலிஸாரின் சேவையைப் பெறுவதற்கு வருகை தந்திருந்த நபர்களிடமிருந்து சுமார் 1 கோடியே 40 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படை தலைமையக கலாசார பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சதீஷ் கமகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தலா 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை விதித்து சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படைத் தலைமையக கலாசாரப் பிரிவு மற்றும் காலி மற்றும் எம்பிலிபிட்டிய பொலிஸ் வளையத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றிய காலப்பகுதியில் போதைப்பொருள் விற்பனையாளர்கள், திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மற்றும் பொலிஸ் சேவையில் இணைந்துக் கொள்ள வந்திருந்த நபர்களிடமிருந்தும் சுமார் 1 கோடியே 40 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படைத் தலைமையகத்தின் கலாசார பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சதீஷ் கமகே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரால் வெவ்வேறு நபர்களின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று வங்கிக் கணக்குகளில் இருந்து குறித்துப் பணம் மீட்கப்பட்டிருந்ததுடன், மேலும் ஒரு தனியார் வங்கி கணக்கிலிருந்து 1 கோடியே 10 இலட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டிருந்தது. குறித்த வங்கி கணக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்கு எனவும், இலஞ்சமாக பெறப்படும் பணத்தை வைப்பிலிடுவதற்காக மேற்படி வங்கி கணக்குகள் சந்தேகநபரால் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்திருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று (30) கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். அசங்க போதரகம தலைமையில் இடம்பெற்றிருந்தது. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு 45 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் வழக்கு விசாரணைக்காக சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது பிரதிவாதி மற்றும் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்காக ஆஜரான சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை கருத்திற்கொண்ட நீதவான் சதீஷ் கமகேவுக்கு தலா 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்க பிணை விதித்து பிணையில் விடுத்திருந்தார்.

மேலும் சந்தேகநபருக்கு வெளிநாடு செல்லப் பயணத்தடை விதித்த நீதிமன்றம், விசாரணை முன்னேற்றங்கள் தொடர்பில் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துமாறும் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

## காணாமற்போனோர் தொடர்பான அலுவலக பணியிட வெற்றிடம்

2016ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் 2025 ஒக்டோபர் மாதத்தில் உறுப்பினர் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

நிகழ்வு கண்டறிதல் அல்லது நுண்ணாய்வு, மனிதவுரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம், மனிதாபிமான பதிலிறுப்பு என்பவற்றின் முன்னனுபவம் கொண்டவர்களிடமிருந்தும் அல்லது, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான ஏனைய தகைமைகளை உடையவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் ( www.parliament.lk ) 'கா.ஆ.அ. விற்கான உறுப்பினர்கள் நியமனம்' என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025 ஒக்டோபர் 14 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது

constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் 'காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான உறுப்பினர் நியமனம்' எனக் குறிப்பிடவேண்டும்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கிரிப்டோகரன்சிகள் சவாலா? அபாயமா?

அண்மையில் அரசியல் தலைவர்களின் சொத்து விவரங்கள் வெளியாகின. அவை குறித்து பெரும் சர்ச்சைகளும் விவாதங்களும் எழுந்தன. ஓர் அமைச்சரின் சொத்து அறிவிப்பில் 'கிரிப்டோகரன்சி' சேமிப்புகள் இடம்பெற்றுள்ளன என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுவரை நாட்டில் கிரிப்டோகரன்சி சட்டபூர்வமா? சட்டவிரோதமா? என்ற குழப்பம் நிலவி வரும் நிலையில், இந்த அறிவிப்பு நாட்டின் சட்டரீதியான நிலைப்பாட்டையும், அரசின் எதிர்கால முடிவுகளையும் சோதனைக்கு உட்படுத்துகிறது.

### மத்திய வங்கியின் எச்சரிக்கை

இலங்கை மத்திய வங்கி (ஸீயறீஸி) 2023 மார்ச் மாதம் வெளியிட்ட அறிவிப்பில், கிரிப்டோகரன்சிகள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட சொத்து வகை அல்ல என்றும், இலங்கையில் சட்டபூர்வமான நாணயமாக அவை கருதப்படுவதில்லை என்றும் தெளிவுபடுத்தியது. மேலும், வெளிநாட்டு நாணயச் சட்டத்தின் கீழ் (Foreign Exchange Act No.12 of 2017) டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு போன்ற மின்னணு நிதி பரிமாற்றக் கார்டுகள் கிரிப்டோ பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்த முடியாது என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருள், கிரிப்டோகரன்சிகள் நாட்டின் உத்தியோகபூர்வ பொருளாதாரத்தில் பங்களிக்காது, மாறாக மதிப்புமிக்க வெளிநாட்டு நாணய இழப்புக்குக் காரணமாகிறது.

உலகளாவிய அபாயங்கள்

ஐ.நா. போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் அலுவலகம் (UNODC) வெளியிட்ட எச்சரிக்கைகளின்படி, கிரிப்டோகரன்சிகள் மூலம் பணம் சுத்திகரிப்பு (Money Laundering) அபாயம் மிக அதிகம். பாரம்பரிய "Placement–Layering–Integration" முறையைப் போலவே இருந்தாலும், கிரிப்டோவில் இது மிகவும் எளிமையானதாகும்.

கணக்கு ('address') உருவாக்க சில விநாடிகள் போதுமானது; செலவில்லாமல் ஆயிரக்கணக்கில் உருவாக்க முடியும்.

குறைந்த செலவில் ஆயிரக்கணக்கான பரிவர்த்தனைகள் கணினி நிரல்களால் நடத்தப்படலாம்.

விகிதங்களில் ஏற்படும் திடீர் உயர்வுகள் காரணமாக, எதிர்பாராத செல்வம் சட்டபூர்வமானது போலக் காட்ட எளிதாகிறது.

இது சட்டவிரோத வருமானங்களை மறைக்கவும், ஒழுங்கற்ற பரிமாற்றங்களை நடத்தவும் குற்றவாளிகளுக்கு வசதியான சூழலை உருவாக்குகிறது.

### குற்றவியல் இணைப்பு

ஐ.நா. போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் அலுவலகம் 2024ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில், காசினோ, ஆன்லைன் சூதாட்ட தளங்கள் மற்றும் கிரிப்டோ பரிமாற்றங்கள் இணைந்து, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பன்னாட்டு குற்ற வலைப்பின்னல்களின் நிதி அடித்தளமாக மாறிவிட்டதாக குறிப்பிடுகிறது.

"தொழில்நுட்ப அடிப்படையிலான சூதாட்ட மற்றும் கிரிப்டோ தீர்வுகள், குற்றவியல் பொருளாதாரத்தை வேகமாக விரிவுபடுத்தி வருகின்றன" என்று அந்த அறிக்கை எச்சரிக்கிறது. இத்தகைய சூழலில், இலங்கையில் கூட காசினோ தொழில்துறை விரிவுபடுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்திருப்பது, கிரிப்டோ பயன்பாட்டைத் தவறாகச் சந்திக்கும் அபாயத்தை அதிகரிக்கிறது.

### அரசின் கடமை

இலங்கை மக்களால் வழங்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க ஆணையம், ஊழலை அகற்றவும், வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டவும் ஆளும்தரப்பைப் பொறுப்பேற்றுள்ளது. இதுவரை அரசியல் மனப்பாங்கு இருக்கிறது என்பதற்கான சுட்டுமிரல்கள் கிடைத்துள்ளன. ஆனால் வெறும் விருப்பத்தோடு மட்டும் போதாது; முன்கூட்டிய சட்ட ஏற்பாடுகள், மேற்பார்வை அமைப்புகள், தொழில்நுட்ப நிபுணத்துவம் ஆகியவை உடனடியாக தேவைப்படுகிறது.

குறிப்பாக, போதைப்பொருள் கடத்தல், ஊழல், மறைமுக நிதி ஓட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கம் சட்டத்தில் உள்ள இடைவெளிகளை மூடுதல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றில் பின்தங்கக் கூடாது.

### சமூகத்தின் பங்கு

இது வெறும் அரசின் பொறுப்பல்ல. வணிக நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், கல்வி துறைகள், குடிமக்கள் என அனைவரும் சட்டப்படி இணக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அரசாங்கம் முதலில் தானே வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட்டு முன்னுதாரணம் காட்ட வேண்டும். அப்போதுதான் தனியார் துறை மற்றும் சமுதாயமும் அதனை பின்பற்றும்.

இலங்கையின் பொருளாதாரம் தற்போது மிக நுணுக்கமான கட்டத்தில் உள்ளது. வெளிநாட்டு முதலீடுகள், கடன் மேலாண்மை, மக்கள் வாழ்வு அனைத்தும் சவால்களை எதிர்கொள்கின்றன. இதேசமயம் கிரிப்டோகரன்சி போன்ற ஒழுங்குமுறை இல்லாத நிதி கருவிகள் நாட்டில் திடீரென வேரூன்றினால், அது ஊழல், குற்றவியல் வலைப்பின்னல், வெளிநாட்டு நாணய இழப்பு போன்ற ஆபத்துகளைப் பெருக்கக்கூடும்.

எனவே, அரசு உடனடியாக சட்டரீதியான தெளிவை ஏற்படுத்த வேண்டும். கிரிப்டோகரன்சிகளை முற்றிலும் தடைசெய்வதா? ஒழுங்குபடுத்துவதா? கண்காணிப்பதா? என்பதைப் பற்றிய தெளிவான கொள்கையை வெளிப்படுத்தவேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, சட்ட ஒழுங்கு ஆகிய மூன்றின் அடிப்படையில் மட்டுமே, இத்தகைய புதிய சவால்களை இலங்கை சமாளிக்க முடியும்.

## சிறீதரன் எம்.பி. ஜெனிவா பயணம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரின் பக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் நேற்றுபம் பயணமானார். அவர் அங்கு வேறு பல முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் செப்டெம்பர் 8 ஜெனிவாவில் தொடங்கியது. இக்கூட்டத்தொடரில் புதிதாக நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு செப்டெம்பர் 9 வெளியிடப்பட்டதுடன், அதில் திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட முதலாவது மீளாய்வு வரைவு கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று ஜெனிவா சென்றடைந்த தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுத்தலைவர் சிறிதரன், அங்கு இன்று நடைபெறவுள்ள பக்க நிகழ்வொன்றில் பங்கேற்கவுள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தினதும், பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்துவார் என்றும், அதன்போது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## லஞ்சம், ஊழல் ஆணைக்குழு தலைவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும்

### பெரமுன கட்சியின் செயலாளர் வலியுறுத்து

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜேவிபியின் சட்ட பிரிவில் உறுப்பினராக பதவி வகித்தார் என்று அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆணைக்குழுவின் சுயாதீனத்தை கருத்திற்கொண்டு பணிப்பாளர் நாயகம் உடன் பதவி விலக வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டவாட்சியை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆளும்தரப் பும் எதிர்க்கட்சியினரை இலக்குப்படுத் தியுள்ளது. பொலிஸ் திணைக்களம் முறையற்றதாகச் செயற்படுகிறது. ஜே.வி.பியின் காரியாலயத்தில் அரசியல் செயற்பாட்டாளராக இருந்த சானி அபேசேகர குற்றப்புலனாய்வு திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் ஜேவிபியின் தேர்தல் பிரச்சார மேடைகளில் உரையாற்றிய ரவி செனவிரத்ன பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்றவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸார் தற்போது அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்றனர்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மக்கள் விடுதலை முன்னணியின் சட்ட பிரிவில் உறுப்பினராக பதவி வகித்தார் என்று அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர் நந்தன குணதிலக குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுயாதீன இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் சுயாதீனத்தை கருத்திற்கொண்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்கதிஸாநாயக்க பதவி விலகவேண்டும் அல்லது இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்த நபருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளவேண்டும் என்றார்.

## முன்னாள் அமைச்சர் பிரசன்னவுக்குப் பிணை

போலி ஆவணங்களைத் தயாரித்து ஆளும்தரப்புக்குச் சொந்தமான நிலத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கு கம்பஹா மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

போலி ஆவணங்களைத் தயாரித்து ஆளும்தரப்புக்குச் சொந்தமான நிலத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவரது பிணை மனு மீதான விசாரணை நேற்று கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி நயனா செனவிரத்னவின் தலைமையில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை பரிசீலித்த நீதிபதி சந்தேகநபர்களான பிரசன்ன ரணவீர மற்றும் சரத் எதிரிசிங்க ஆகியோரை கடுமையான பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவித்திருந்தார். சந்தேகநபர்கள் தலா ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐந்து சரீரப் பிணைகளிலும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையும் விதித்து விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன், சந்தேகநபர்கள் வெளிநாடு செல்லவும் நீதிமன்றம் பயணத்தடை விதித்தது. கடவுச்சீட்டுகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் பிரிவில் கையெழுத்திட வேண்டும் எனவும் பிணை நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரவிராஜ் எம்.பி. கொலை வழக்கில் மனம்பேரி சந்தேகநபர் இல்லை

## சொல்கிறார் பெரமுனவின் செயலாளர்

போதைப்பொருள் விவகாரத்தில் சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ள பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மனம்பேரி நடராஜா ரவிராஜ் படுகொலை விவகாரத்தில் சந்தேகநபரல்ல, அவர் சாட்சியாளர், அவருக்கு எதிராக இந்த விடயத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்

எமது கட்சி சார்பில் பல்லாயிரக்கணக்கானோர் தேர்தலில் முன்னிலையானார்கள். இவற்றில் குற்றவாளிகளும், சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் இருக்க முடியும். அனைவரின் பின்னணியும் எமக்குத் தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

தனியார் தொலைக்காட்சியுடன் நடைபெற்ற நேர்காணலின் போது இதனைத் தெரிவித்தார்.

கேள்வி – நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெரும் தொகையில் அகப்படும் ஐஸ்போதைப்பொருள் உற்பத்திக்கான மூலப்பொருள் தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மனம்பேரி கைது செய்யப்பட்டுள்ளார். பாதாள குழுக்களுடன் இவர் நேரடியாக தொடர்புக் கொண்டுள்ளமை நீதிமன்ற அறிக்கையிடலுடன் தற்போது வெளிப்படுகிறது.

இந்தநபர் பொதுஜன பெரமுனவுடன் நீண்டகாலமாக ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளார். உண்மை வெளிப்பட்டவுடன் அவரைக் கட்சியில் இருந்து நீக்கினீர்கள், அதை தவிர்த்து வேறொன்றும் செய்யவில்லை. இவ்விடயம் தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள் ?

பதில்- மனிதர்களை நீராட்டி கட்சிக்குள் எடுக்க முடியாது என்று அரசுத் தலைவர் அநுரகுமார குறிப்பிட்டுள்ளார். இவர்களின் பின்னணி எமக்குத் தெரியாது.

கேள்வி – ஒருவரின் பின்னணியை ஆராயாமல் கட்சியில் இணைத்துக் கொள்வீர்களா, அவர்களுக்கு வேட்புமனு வழங்குவீர்களா?

பதில் - நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எமது கட்சி சார்பில் பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையானார்கள். இவற்றில் குற்றவாளிகளும், சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் இருக்க முடியும்.

கேள்வி - ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மனம்பேரி நடராஜா ரவிராஜ் படுகொலையின் சந்தேகநபர் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் ஊடக அலுவலகமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இவ்விடயம் பற்றி என்ன குறிப்பிடுகின்றீர்கள் ?

பதில் - சம்பத் மனம்பேரி நடராஜா ரவிராஜ் படுகொலை விவகாரத்தில் சந்தேகநபரல்ல, அவர் சாட்சியாளர். அவருக்கு எதிராக இந்த விடயத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இதனை நான் ஆராய்ந்து பார்த்தேன்.

கேள்வி – அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டதன் பின்னரா தேடிப்பார்த்தீர்கள்?

பதில்-இல்லை, ஊடகங்களில் இவ்விடயம் வெளியானதன் பின்னரே ஆராய்ந்து பார்த்தேன். கட்சியின் வேட்புமனு வழங்கும்போது சகல உறுப்பினர்களும் சத்தியக் கடதாசி வழங்கினார்கள். அதிலும் இவர் இந்த விடயம் பற்றி ஏதும் குறிப்பிட்டிருக்கவில்லை என்றார்.

# பயணிகளுக்குப் பயணச்சீட்டு வழங்குவது இனி கட்டாயம்

## மேல் மாகாணத்தில் புதிய நடைமுறை

மேல்மாகாணத்தில் பொதுபோக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்குவது முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பயணசீட்டை விநியோகிக்காத பேருந்தின் சாரதி, நடத்துனர் மற்றும் பயணச்சீட்டை பெற்றுக்கொள்ளாத பயணிகளிடம் தண்டப்பணம் அறவிடப்படும் என்று மேல்மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அறிவித்துள்ளது.

அத்துடன் மேல்மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் அனைத்தையும் பதிவு செய்வதும் இன்று முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையாளர் (போக்குவரத்து) ஜீவந்த கீர்த்திரத்ன தெரிவித்ததாவது:

மேல்மாகாணத்தில் பொதுபயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளின் சேவைகள் வினைத்திறகாக்கப்பட வேண்டும்.இதற்கமைய பொதுபயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்குவது இன்று முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்காத சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு 750 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படும்.

அத்துடன் பயணச்சீட்டு பெற்றுக்கொள்ளாத பயணிகளுக்கு 100 ரூபாய் தண்டப்பணத்துடன் பயணக்கட்டணத்தின் தொகை இரு மடங்காக அறவிடப்படும்.இந்த தண்டப்பணமும் வெகுவிரைவில் திருத்தப்படும்.

மேல்மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் அனைத்தும் பதிவு செய்வது இன்று முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.இதற்காக மேல்மாகாணத்தில் 07 பிரதேச காரியாலயங்களில் முச்சக்கர வண்டி சாரதிகள் தமது விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என்றார்.

# இனவாதப் பிசாசுகளிடமிருந்து நாட்டை காக்க ஒன்றுபடுங்கள்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு




இனவாதத்தை கிளப்பும் பிசாசுகள் மீண்டெழுந்துள்ளன. அதிகாரத்துக்காக சதி குறித்தும், சூழ்ச்சி பற்றியும் அவை மந்திராலோசனை நடந்துகின்றன. இந்த பிசாசுகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் 3ஆவது தொடக்க நிகழ்வு மட்டுவிலில் நேற்று காலை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

பொருளாதார ரீதியில் இலங்கை வேகமாக முன்னேறிவருகின்றது எனதரவுகள் கூறுகின்றன. அதேபோல இலஞ்சம், ஊழல் ஒழிக்கப்பட்டு வருகின்றது. இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றுக்கும் முடிவு கட்டப்பட்டு வருகின்றது.

இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஓரணியில் திரளவேண்டும். அவ்வாறு நடந்தால் இலகுவில் முன்னோக்கிச் சென்று விடலாம். இதனையே எமது அரசுத் தலைவர் எல்லா இடங்களிலும் வலியுறுத்தி வருகின்றார். எனவே, இந்த இனவாதம் என்ற பிசாசுக்கு எமது நாட்டில் நிரந்தமாக முடிவு கட்டவேண்டும். அதற்குரிய நடவடிக்கையைநாம் முன்னெடுக்கும்போது பழைய பிசாசுகள் மீண்டெழுவதை காண முடிகின்றது. பழைய திருடர்கள் ஓரணியில் திரண்டுள்ளனர். அதிகாரத்துக்காகச் சதி மற்றும் சூழ்ச்சிகளை செய்ய முடியுமா என்பது பற்றி ஆராய்கின்றனர்.

இனவாதத்தை தூண்டியேனும் தமது இருப்பைதக்கவைத்துக்கொள்ள முடியுமா என்பது பற்றியும் கதைக்கின்றனர். இது பற்றியே ரணிலும், மகிந்தவும் அவரது வீட்டில் மந்திராலோசனை செய்கின்றனர். ரணிலும், மஹிந்தவும் நம்பர் வன் திருடர்கள். கடந்த காலங்களில் மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்தான் ரணில். இந்நாட்டில் போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாத்தவர்தான் ராஜபக்ச. எனவே, இவர்களிடமிருந்து நாட்டை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் எமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்படும் - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக திறப்பு விழாவில் கலந்துகொண்ட வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் சுட்டிக்காட்டினர். நிகழ்வு முடிவடைந்த பின்னர் முன் பகுதிக்கு வந்த விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தமது பிரச்சினைகள் குறித்துச் சுட்டிக்காட்டினர்.



காலைக்கதிர் Kalaikkathir

## மூன்றாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

200 மில்லியன் ரூபாய் செலவில் யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது. 2022 மார்ச் 20 திகதி அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்சவினால் முதல் தடவையாகத் திறந்து வைக்கப்பட்டது. அதுபல்வேறுகாரணங்களால் செயலிழந்த நிலையில் முன்னாள் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையிலான குழுவினரால் மீளத் திறந்துவைக்கப்பட்டபோதும் அதுவும் செயலிழந்துபோனது.

இந்நிலையில் அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்த வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மீளவும் பொருளாதார மத்திய நிலையத்தை தொடங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

## 100 பாடசாலைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவை வழங்குவதாக இதன் போது அவர் அரசுத் தலைவரிடம் தெரிவித்தார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 100 பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலுக்கான எதிர்காலத் திட்டங்களையும் முன்வைத்தார்.

இலங்கை மக்களின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கும், இலங்கையில் சமூக சேவைக்கான அவரது நீண்டகால அர்ப்பணிப்புக்கும் யொஹெய் சசகாவாவுக்கு அரசுத்தலைவர்அநுரகுமாரதனதுநன்றியைத் தெரிவித்தார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## எரிபொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (ளீளீஊணறு) அடிப்படையில் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்க வீதம், 2025 ஓகஸ்ட் மாதத்தில் 1.2 சதவீதத்தில் இருந்ததிலிருந்து 2025 செப்டம்பரில் 1.5 சதவீதமாகச் சற்று அதிகரித்துள்ளது என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

செப்டெம்பர் மாதத்துக்குரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் தொடர்பில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பணவீக்க வீதம் 2025 ஓகஸ்ட் மாதத்தில் 2.0 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 2025 செப்டம்பரில் 2.9 சதவீதமாக உயர்ந்துள்ளது.. செப்டம்பரில் உணவு அல்லாத ஆண்டுப் பணவீக்கம் 0.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது 2025 ஓகஸ்ட் மாதத்தில் 0.8 சதவீதமாக பதிவாகி உள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சட்டவிரோதமாகச் செயற்பட்ட 3 இந்திய ஜேதிடர்கள் கைது

*சுற்றுலா வீசா மூலம் இலங்கை வந்த இந்தியர்கள், சட்டவிரோதமாக ஜோதிட நிலையம் அமைத்து இயங்கிய நிலையில், மூவர் கைது செய்யப்பட்டனர்.*

*பருத்தித்துறை தும்பளை வீதியில் குறித்த சட்டவிரோத ஜோதிட நிலையம் அமைத்து இயங்கி வந்துள்ளது. இந்த நிலையத்தினை இந்தியாவின் பெண்களூரைச் சேர்ந்த இந்தியர்கள் மூவர் நடத்தி வந்துள்ளனர்.*

*இந்த நிலையம் தொடர்பாக தும்பளை பிரிதேச கிராம அலுவர் பருத்தித்துறை நகரசபை தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.*

*இந்த விடயம் தொடர்பில் நேற்று பருத்தித்துறை நகர பிதா நேரில் சென்று அவதானித்து குறித்த இந்தியர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளார். ஆனாலும் நேற்றும் ஜோதிட நிலையம் இயங்கி வந்ததை அடுத்து நகர பிதா வின்சன் டீ டக்ளஸ் போல் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இந்தியப் பிரஜைகளின் கடவுச் சீட்டை பரிசோதனை செய்தபோது குறித்த மூவரும் சுற்றுலா வீசாவில் நாட்டிற்குள் வந்துள்ளமை தெரியவந்தது.*

*இதனையடுத்து சட்டவிரோத ஜோதிட நிலையம் அமைத்து இயக்கி வந்த மூன்று இந்தியர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.*




# சட்டவிரோதமாக தேக்கு மரங்களை ஏற்றிச்சென்ற சந்தேகநபர் கைது



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸாரினால் சம்மாந்துறை, வங்களாவடி பிரதேசத்தில் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பல ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தேக்கு மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. இவற்றை ஏற்றிச் சென்றவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த பிரதிப்குமாரவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த தேக்கு மரக்குற்றிகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சம்மாந்துறை விளினியடி 02 பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர்.

# யானையுடன் மோதி சொகுசு கார் விபத்து



காத்தான்குடியில் இருந்து பொத்துவில் நோக்கி பயணம் செய்த சொகுசு கார் யானையுடன் மோதி விபத்திற்குள்ளானது.

இவ்விபத்து சம்பவம் சனிக்கிழமை(27) இரவு 7 மணியளவில்இடம்பெற்றுள்ளது. பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் ஊரணி காட்டுப்பகுதியில் யாணையுடன்மோதுண்டுகுறித்த கார் பலத்த சேதம் அடைந்தது. எனினும் அதில் பயணித்த குடும்பம் தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி தப்பியுள்ளது.

குறித்த பகுதிகளில் பிரதான வீதியில் மாலை மற்றும் இரவு நேரங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாக பயணிகள் தெரிவித்தனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# பயணிகள் முச்சக்கர வண்டிப் பதிவு மேல் மாகாணத்தில் இனி கட்டாயம்

மேல்மாகாணத்தில் உள்ள அனைத்து பயணிகள் முச்சக்கர வண்டிகளின் பதிவுகளும் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், இதற்காக மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை புதிய இணையத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் https://wptaxi/net/ என்ற இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்.

முச்சக்கர வண்டிகளுக்கான பயணிகள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் செயல்பாட்டு முகாமையாளர் ஜீவிந்த கீர்த்திரத்ன தெரிவித்தார்.

இந்தப் பதிவு செயல்முறை முழுமையாக இணையவழி மூலம் நடைபெறுவதால், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் இணையத்தளத்தில் தங்கள் விவரங்களைச் சமர்ப்பித்து, பதிவுக்கான நேரத்தைப் பெறலாம். இந்த நேரத்திற்கு ஏற்ப, சம்பந்தப்பட்ட பிரதேச செயலக அலுவலகங்களில் பதிவு செய்ய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# 6ஆவது நாளாகவும் பட்டினிப் போராட்டம்

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 6ஆவது நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

போராட்டம் யாழ். செம்மணியில் செப்டெம்பர் 25 தொடங்கிய நிலையில் இன்று வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்து

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்திற்கு நீதி கோரியும் இந்தப் பட்டினிப் போராட்டம் தொடங்கப்பட்டது.

போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் தொடக்கத்தில் அணையா விளக்கு பகுதியில் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி போராட்டம் தொடங்கியது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், சிறிலங்காவில் உள்நாட்டுப்பொறிமுறையைநிராகரிக்கின்றோம், தமிழ் இனவழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்

இன்றைய போராட்டம் காலை 10.00 மணிக்குத் தொடங்கி நண்பகல் 1.00 மணிக்கு நிறைவடைய உள்ளது. இப்போராட்டத்தில் அறிக்கை ஒன்று வாசிக்கப்பட்டு அந்த அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கபபடவுள்ளது.






# விவசாயத்தில் புதிய நுட்பத்தை புகுத்தினால் மாத்திரமே உயர் விளைச்சலை பெறமுடியும்

## பார்க் பணிப்பாளர் பாஸ்கரன் தெரிவிப்பு

(சகாதேவராஜா)

விவசாயத்தில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தினால் மாத்திரமே உயர் விளைச்சலை பெறமுடியும். எனவேதான் பரீட்சார்த்தமாக அம்பாறை மாவட்டத்தில் புதிய இலகுவாக உறிஞ்சும் திரவ உரவகையை அறிமுகம் செய்திருக்கிறோம் என்று பார்க் (யழிஷஉவ ஞூஜமிளஷஜழிமிஷ்லிஜழியி (ணேஸமி) ஸிமி-) நிறுவன பணிப்பாளர் ரத்னசபாபதி பாஸ்கரன் சம்மாந்துறை விவசாயிகள் மத்தியிலே பேசும்போது தெரிவித்தார் .

சம்மாந்துறை நீர்ப்பாசன திணைக்கள மண்டபத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு திங்கட்கிழமை நடைபெற்றது. ஓய்வுநிலை கமநல உத்தியோகத்தர் சிதம்பரநாதன் ஒருங்கிணைப்பில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சம்பத் வித்யாரத்ன புதிய உரவகை தொடர்பாக விளக்கமளித்தார்.

பணிப்பாளர் பாஸ்கரன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது நிறுவனம் (Barck International (Pvt) Ltd என்பது இலங்கையின் விவசாயத் துறையில் ஒரு குறுகிய காலத்தில் சிறந்து விளங்கும் ஒரு வணிகக் குழுமமாகும்.

விவசாயத்துறையில் நம்பிக்கைக்குரிய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வணிக நிறுவனம் ஆகும். பார்க் உரம் மூலம் அனைத்து பயிர்களிலும் சிறந்த விளைச்சலை வழங்கி, விவசாயிகளிடையே நம்பிக்கையையும் அரச அதிகாரிளிடம் வலுவான கூட்டுறவையும் வளர்த்துள்ளோம்.

ஊட்டச்சத்துள்ள தாவரங்களுக்கு எளிதில் உறிஞ்சக்கூடிய வடிவங்களில் மாறும் இரசாயன உரங்களால் பயிர் விளைச்சலும் தாவர ஆரோக்கியமும் அதிகரிக்கின்றன - என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2025இல் வெளியிடப்பெற்றது